1972 டிசம்பர் 8]

(2) மேற்குறிப்பிட்ட தொழிற்சாலையில் பணிபுரியும் சுமார் 400 தொழிலாளர்களுக்காக மட்டும் இ.எஸ்.ஐ. மருந்தகம் ஒன்று எளாவூரில் தனியே அமைப்பது என்பது இயலாது ; மேலும்

(3) மேற்குறிப்பிட்ட தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்களுக்கு 30 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மீஞ்சூர் இ.எஸ்.ஐ. மருந்தகத்தில் மருத்துவ வசதி அளிப்பது தொழிலாளர்களுக்கு வசதியாக இருக்காது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, நானூறு தொழிலாளர்கள் இருக்கிற அந்தத் தொழிற்சாலை அரசாங்கத்தினுடைய உதவியோடு மறுபடியும் திறக்கப்பட இருக்கின்ற நிலையில் அங்கே பணியாற்றுகின்றவர்கள் 400 தொழிலாளர்கள்தான். வேறு தொழிற்சாலை இல்லை. ஆகவே, இயலாது என்று அமைச்சர் அவர்கள் பதிலளித்தார்கள். அங்கே நானூறு தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். அங்கே ஒரு தொழிற்சாலைதான் இருக்கிறது. வேறு தொழிற்சாலை இருக்க முடியாது, காரணம் அந்த ஒரு தொழிற்சாலையும் ஆந்திர எல்லையிலேதான் இருக்கிறது, வேறு தொழிற்சாலை வரவேண்டுமென்றால் ஆந்திராவிலேதான் வரவேண்டிய நிலை இருக்கிறது. எனவே இந்த நிலையில் அதற்கு சிறப்புத் திட்டமாக ஸ்பெஷல் கேஸ் என்ற முறையிலே ஒரு இ.எஸ்.ஐ. மருத்துவமனை துவங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : குறைந்த பட்சம் 750 தொழிலாளர்கள் உள்ள இடத்தில்தான் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்திருக்கிறது. அதுபோல் எளாவூரிலும் அந்த அளவிற்கு வந்தவுடனே அரசு ஆவன செய்யும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS LEGISLATURE

Welfare Department schools at Pechiparai and Pathukani

* 90 *Q.*—THIRU J. JAMES : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(*a*) whether it is a fact that the Welfare Schools at Pechiparali and Pathukani are run without sufficient number of teachers in each school ;

(*b*) if so, the number of students and teachers in each school; and

(*c*) what action has been taken by the Government to provide sufficient number of teachers to these schools?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ), (இ) & (உ) இல்லை. பேச்சிப்பாறை பள்ளியில் 481 மாணவர்களுக்கு 15 ஆசிரியர்களும் பத்துக் காணி பள்ளியில் 313 மாணவர்களுக்கு 11 ஆசிரியர்களும் இருக்கிறார்கள். இரண்டு பள்ளிகளிலும் இப்பொழுது ஒவ்வொரு வகுப்புக்கும்/பிரிவுக்கும் ஒரு ஆசிரியர் இருக்கிறார்.

தூத்துக்குடியிலுள்ள காமராசர் கல்லூரிக்கு நில ஒப்படை

*91. வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி காமராசர் கல்லூரிக்கு இந்த அரசு இலவசமாக நிலம் ஏதேனும் வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு? எந்த அடிப்படையில்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, காமராசர் கல்லூரிக்குத் தேவையான இடத்தை அதனுடைய நிர்வாகிகள் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது அந்த இடத்திற்கான அனுமதியைக் கேட்டதாகவும் அது தரப்படவில்லை எனவும் சொல்லப்படுகிறதே, அந்த இடம் தமிழக அரசுக்குச் சொந்தமாக உள்ளதா ? அல்லது மத்திய அரசுக்குச் சொந்தமான இடமாக இருக்கிறதா ? மத்திய அரசுக்குச் சொந்தமான இடமாக இருந்தால் அதனைப் பெறுவதற்கு உரிய முயற்சியை தமிழக அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அந்த இடம் மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமானதுதான். நம்முடைய அரசு நிலம் வழங்கியுள்ளதா என்று கேட்டார்கள், இல்லை யென்று சொன்னேன். தூத்துக்குடியில் உள்ள காமராசர் கல்லூரிக்கு 50 ஏக்கர் நிலத்தைக் கோரி அந்த நிர்வாகத்தினர் அரசுக்கு எழுதினார்கள், அப்பொழுது மத்திய அரசாங்கம் அந்த இடத்தை 2,88,889 ரூபாய் கொடுத்துவிட்டு எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். ஆனால் அந்த நிர்வாகத்தினர் காலஞ்சென்ற பேரறிஞர் அண்ணா அவர்களிடம் மனுக் கொடுத்து அதனை இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் மத்திய அரசுக்கு எழுதி இப்பொழுது அவர்கள் 99 வருஷத்திற்கு வருஷம் ஒன்றுக்கு 100 ரூபாய் வாடகைக்குக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.